DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No.411/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.11 P.W.6 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : T. ரவி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது அவிநாசி மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 29.08.2019 ஆம் தேதி தலைமை காவலர் பாலகிருஷ்ணன் நிலைய அலுவலில் இருந்த போது நேரில் ஆஜரான பெரியகோட்டை ஜே ஜே நகரைச் சார்ந்த தங்கையா மகன் ஜெயராஜ் என்பவர் கொடுத்த புகாரினைப் பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 455/2019 சட்டப்பிரிவு 287 இதச–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஆவணங்களை கணம் நீதிமன்றத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து ஒரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

2. நான் அன்றைய தினமே இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 29.08.2019 ஆம் தேதி மதியம் 13 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரகுபதி, முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும்

பார்வை மகஜரும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ஜெயராஜ், அமராவதி, கற்பகம், முருகன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணை அடிப்படையில் சம்பந்தப்பட்ட எதிரியை தேடி புலன் வைத்த போது 15.10.2019 காஷினி பூரணி சந்த் என்பவரை கைது செய்து எதிரியை இரு நபர் ஜாமினில் விடுவித்தேன்.

பின்பு காயம் பட்ட அமராவதி என்பவருக்கு சிகிச்சை அளித்த கோவை கங்கா மருத்துவர் மாது பெரியசாமி என்பவரை விசாரித்து காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று பெற்றேன். அந்த **காயச் சான்றிதழ் ஆ.சா.ஆ.6** என குறியீடு செய்யப்படுகிறது.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் பாலகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகார் இருபத்தி நான்கு மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். கால தாமதத்திற்கான காரணம் புகாரிலும் முதல் தகவல் அறிக்கையின் எட்டாவது காலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். _புகார் பதிவு செய்யப்பட்டு உங்களது புலன் விசாரணைக்கு எந்த தேதியில் எப்போது ஒப்படைக்கப்பட்டது என்றால் அன்றைய தினமே ஒப்படைக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் இறுதி காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது சம்பவ இடத்தை அடையாளம் காட்டிய நபர்கள் குறித்து உங்களது புலன் விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பந்தமாக உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கோவை மருத்துவமனையில் இருந்து தகவல்கள் கிடைக்க வரவில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடமானது தென்னை மட்டைகள் வெட்டக்கூடிய விவசாய செய்யக்கூடிய உள்ள இடம் என்றால் சரிதான். நீங்கள் வந்து அந்த மிஷின் எந்த திசையில் இருந்தது என்பது குறித்து குறிப்பிடவில்லை என்றால் மெஷின் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த மெஷின் பொதுவாக தென்னை மட்டை வெட்டும் மிஷின் ஆனது மேற்படி விவசாய பொருட்களான ஆடு மாடுகளுக்கு தீவனம் வெட்ட கூடிய மிஷின் என்றால் தெரியவில்லை.

மேற்படி பட்டியல் சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். இப்படி மிஷினின் பற்களின் இடைவெளிகள் குறித்து உங்களது குற்ற அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். நீங்கள் மெஷின் நிலையில் ஓடும் நிலையில் இருந்ததா என்பது பற்றி உங்களது அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். காயம் நபருக்கு நபரை மெஷினை இயக்குவதற்கு எதிரி தான் நியமித்தார் என்பது குறித்து உங்களது அறிக்கையில் இல்லை என்றால் கண்ணுக்கு சாட்சிகள் சொல்லியுள்ளார்கள். பொய்யாக செய்கிறீர்கள் என்றாலும் கூடையே அள்ளி போடும் வேலை தான் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. காயம் பட்ட நபர் கவனமாக செயல்பட்டு இருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றாலும் சொன்னபடி சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடம் சென்று மிஷினை பார்த்து இருந்தால்அதன் செயல்பாடு குறித்து கூறியிருப்பீர்கள் என்றால் சரியல்ல.

நீங்கள் நஷ்ட ஈடுபட வேண்டும் என்பதற்காக காயப்பட்ட நபரின் கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்தை எதிரி பாதுகாப்பு வழங்கவில்லை என பொய்யான சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

சுகாதாரரின் சகோதரியான காயம் பட்ட நபருக்கு மேற்படி மிஷினை இயக்குவதற்கான படிப்பு படித்துள்ளாரா என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எந்த பங்களிப்பும் இல்லை என்றாலும் சரி அல்ல.

எதிரி காயம்பட்ட நபருக்கு மிஷினை இயக்குவதற்கான பணியை வழங்கவில்லை என்றாலும் அவராகவே மேற்படி பணியை செய்து யாரும் இல்லாத நேரத்தில் தன்னிச்சையாக செய்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com.,B.L. ,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.